ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

தீர்க்காயுள்ஸுக்கும், திடமான சரீரத்திற்கும், ஸ்திரமான புத்திக்கும்
தர்மத்தை நாடி நடப்பதே நல்லஸாதனமென்று தார்மிகர்கள் தீர்க்காலோ
சனை செய்து தீர்மானித்தவிஷயம். அற்பாயுஸ்ஸுக்கும் அஸ்திரபுத்தியால்
அடிக்கடி மாறுவதற்கும் அதர்மத்தை ஆதரிப்பதே காரணமென்றும் ஆஸ்
திகர்கள் அநுபவித்தவிஷயம். இதை நம்முன்னோர்கள் தபஸ்வின் வலி
மையாலும், ஆஹார விஹாராதி நியமங்களாலும், ஆயிரக்கணக்கான
ஆண்டுகளில் ஆயுளோடிருந்து அன்வய வியதிரேகப் பிரமாணங்களால்
அநுபவித்து, தீர்மானத்தையாவரும் எளிதில் உணரும் பொருட்டு தர்ம
சாஸ்திரமூலமாகத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் தற்காலத்
திய சிலர் அவர்களிடத்தில் நன்றிபாராட்டாததோடு விடாமல் தர்மசாஸ்
திர நூல்களைப் பரவச்செய்து பிராணிகளைக் கெடுத்துவிட்டதாகவும் அந்த
பெரியாரிடத்தில் படாதபழியைச் சுமத்துகின்றனர். இந்த அனியாயத்
தால் ஆயுள் குறைந்ததேயன்றி வேறில்லை. அதை தர்மப் பிரவர்த்தியால்
நிகழ்ந்ததென தர்மத்துவேஷிகள் கற்பிக்கின்றனர். முன் யுகங்களிலிருந்த
வர்களின் சரித்திரங்களை சரித்திர ஆராய்ச்சி, செய்பவர்களும் நம்புகிறார்
கள். அதில் அவர்கள் தர்மமார்க்கத்திலிருந்து க்ஷேமத்தை அடைந்தார்க
ளேயன்றி அதர்மத்தைக் கனவிலும் நினைக்கவில்லை. அக்காலத்தில் அது
ஸரியாயிருந்தது. இக்காலத்திற்கது ஒத்துவராதென்று வாதிப்பது விசா
ரித்தவர்கள் ஸம்மதிக்கக்கூடியதாகாது. தர்மாதர்மவியவஸ்தையும் அவை
களினின்றுண்டாகும் சுகதுக்காதி வியவஸ்தைகளும் எக்காலத்தும் ஒரே
விதமேயன்றி வேறுபட்டதல்ல. ஸத்தியம் சொல்லுவதே ஸாத்விக தர்ம
மென்பது முன் யுகங்களிலே ஏற்பட்டது. இந்த யுகத்தில்அது சரிவரமாட்
டாதென்றும், ஆகவே பொய்பேசுவதே தற்காலத்திற்குரியபெரியதர்மமெ
ன்றும், எவரேனும் சொல்வாரா ? அஹிம்ஸை முற்காலத்தில் தர்மம். தற்
காலத்தில் அது அதர்மம் என்றாவது, தேவர்களையும், பரமேசுவரனையும்,
போற்றி பக்திசெய்வது முன் யுகதர்மம், தற்போது அவர்களைத் தூஷிப்
பதுதான் தகுந்த தர்மம் என்றாவது எவரேனும் நினைப்பாரா ? சுயமரியா
தைக்காரர் அங்ஙனம் துணிந்து கூறுகின்றார்களேயெனில் ஹிரண்யாக்ஷன்
ஹிரண்யகசிபு முதலியவர்கள் அவ்விதம் நினைத்து நடந்ததற்குத் தகுந்த
கதையையபயனைப்பெற்றவரலாற்றைப் பண்டையகாலத்துக் கேட்டிருப்ப
வர்கள்தெரிந்துகொண்டிருப்பார்கள். அதுபோலவேஇவர்களுக்கும்பயனை
பரமேசுவரன் அளிப்பாரேயன்றி அவர்மனம்போல் நடத்திவிடமாட்டார்.
பூர்வம் செய்யப்பட்ட தர்மாதர்மங்களின் பயனாக அமைக்கப்பட்ட விரு
க்ஷடிபோல்த்தான் பின்னிட்டும் அமையும். சுயமரியாதைக்காரர் நினைத்த
படியெல்லாம் நடந்துவிடுமாயின் தற்காலம் அவர்கள் செய்துவரும் அதர்ம
பிரசாரத்திலிருந்து ஜகத்தில் எவ்வளவோ மாறுதல் ஏற்பட்டிருக்கவேண்
டும். அப்படி ஏற்படாததைக்கொண்டே பரமேசுவரன் பழைய வழக்கப்
படியே பயனையளித்து வருகிறாரென்று புலப்படுகின்றதல்லவா ! ஆகவே
அவர் ஆக்ஞைப்படி நடந்து யாவரும் சிரேயஸ்ஸை அடைவாராக. சுபம் !

பத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.

சுக்ல-௵ பங்குனி-௴ ௭௨

ஸத்தியமே ஜயம்.

"ஸத்தியமே ஜயிக்கும். அஸத்தியம் ஜயம்பெறாது. ஸத்தியத்தாற்றான்தேவயானாதிமார்க்கமாகப் பிரம்மாதிலோகம்சென்று அவ்விடத்திய ஸுகங்களைப் பெறுவான்" என்பதாதி ஸத்தியத்தின் பெருமை சுருதிகளில் கொண்டாடப்படுகின்றது. பிரமாணங்கள் மூலமாகத் தெரிந்துகொண்டபடி விஷயங்களை வாக்கினால் சொல்லுவதும், அப்படியே சரீரத்தால் நடத்துவதும் ஸத்யமெனப்படும். அவ்விதமாக நம்முன்னோர்கள் ஸத்தியவிருதத்தை உறுதியாய் நடத்திவந்தார்கள். அதனால் அவர்கள் பரமசிரேயஸ்ஸையும் அடைந்தார்கள். அதனால் அவர்களது ஸந்ததியிற்ஜனித்த நாமும் நாளதுவரை சுகமாகவே வாழ்ந்துவந்தோம். தற்காலத்திலோவெனில் ஊருக்காக உழைக்கின்றேன் என்று தான் நினைத்துக் கொண்டிருப்பது மாத்திரமின்றி பிறராலும் புகழப்பட்டவர்களும் ஸத்தியவிரதத்தை ஆதரிக்கவில்லையென்றால் அன்றாடும் ஸ்வகாரியத்தைக் கூட ஸாதிக்கச்சக்தியற்றவர்களா ஆதரிக்கப் போகிறார்கள். பொதுநலத்திற்கென்று பாடுபடுகின்றவர்களாக கொண்டாடுபவர்கள் ஏதோசில காரியங்களில் இந்தப்பெயரை அடைந்து பிறகு அவர்கள் சட்டசபை முதலிய பெரியஸ்தானங்களில் இடங்கிடைத்தவுடன் தனக்கு ஓட்டு போடவேண்டும் என்று ஓட்டர்களிடம் சொன்ன சொல்லுக்கு நேர் விரோதமாக பொது ஸபைகளில் பொதுஜனங்களின் பிராசினதர்மத்தைக்கெடுப்பதற்காக உள்ள யோசனை சொல்லிச் சட்டமாக்கி வைத்தார்களே யன்றி முன் தாங்கள் பிரதிக்ஞை செய்துகொடுத்தபடி ஏதாவது நடத்தினார்களா? ஒன்றும் நடத்தவில்லையென்பது அவவர்களது அந்தராத்மாவுக்குத்தெரியும். இப்படி அசத்யம்பேசுபவர் ஜனநாயகம் வஹித்தால் பொதுஜனங்கள் எவ்வாறு நன்

மைப் பெறுவார்கள். ஹரிச்சந்திரசக்ரவர்த்தி, சிபிசக்கிரவர்த்தி முதலியவர்கள் ஸத்தியவிரதத்தை பரிபாலனம் செய்ய, தன்பெருமை கூட பாராட்டாமல் ராஜ்யத்தையும், சுகத்தையும் இழந்து ஒரே உறுதியாயிருந்தார்களென்று அவர்கள் சரித்திரத்தைக்கேட்டவர்களுக்குத் தெரியாதவிஷயமில்லை. அவர்களைவிட மேலான ஸ்திதியைத் தாங்களும் அடைந்துவிடவேண்டுமென்று எண்ணங்கொண்டு நன்மை ஒன்றையும் நடத்தமுடியாமல் தீமையெல்லாம் தேடிவிட்டு பெரியோர்களைப்பழிப்பதாலேயேபெருமைபெறபார்க்கிறார்கள். தற்காலத்தில் பெரியோர்களைப் பழிக்காமல்பெருமையடைக்க பெரியோர் ஒருவரையாவது காட்டமுடியுமா? பிரசித்தி பெறவேண்டுமானால் பெரியோர்களை தூஷிக்கவேண்டுமென்பது காலவசத்தால் நேர்ந்துவிட்டது. காசுகிடைக்கவேண்டுமானால் கண்டபடியெல்லாம் பேசவேண்டும். பிராசீன வழக்கத்திற்கு பிரதிகூலமாய் நடப்பதே பிழைப்பில்லாமல் திண்டாடுபவர்களுக்கு பிழைக்கும் வழியென்று கைகண்டபலனாக கொண்டாடப்படுகிறது. இப்படி ஜனநாயகம் பெற்றவர்களே பிரவிருத்தி செய்விப்பார்களானால் ஒன்றும் தெரிந்துகொள்ளாத பாமரஜனங்கள் அதையே நாடி நடக்கின்றார்கள். அப்படியிருக்கையில் ஸத்தியமெங்கே, சௌசமெங்கே, ஸதாசாரமெங்கே என்று ஸாத்விகர்கள் கவலைப்படும்படியாய் விட்டது. ஆயினும் ஸத்தியமே ஜயமென்று சாஸ்திரம் கூறுவதை நம்பியிருப்பவர்களுக்கு சாஸ்திரமென்றும் சட்டத்தை வெளியிட்ட பரமேசுவரன் சரணமாயிருந்து ஸாத்விகர்களின் கவலையைத் தீர்த்துக்காப்பாற்றுவாராக. சுபம்!

பத்திராதிபர்.

வேதபாராயணம்.

(70-வது பக்கத்தொடர்ச்சி)

அப்படியிருக்க வேதஸமூகத்தையே பாராயணம் செய்யும் நமக்கு ஈசன் திருவருள்தானே தரும் என்ற பூர்ண நம்பிக்கை தான் இவ்வேதியர்கட்கு. இவ்விதம் சிரத்தாபக்தியுடன் யாஜுஷர்கள் சர்கை, ஸம்ஹிதை, க்ரமம் என்ற முறைப்படி பாராயணம்

செய்துவந்ததில் அப்பாராயணம் சென்ற 6—1—30ல்- ஸமாப்தி பெற்றது. அச்சமயம் மிகவிமரிசையாய் நடந்ததென்பதை இங்கு கூறாமல் விடுவதற்கில்லை. அன்று பகலில் இச்செய்தியைக்கேட்ட ஆஸ்திகோத்தமரான ஸ்ரீமான் வக்கீல் என். நடேசய்யாவர்கள் யாவரும் எதிர்பாராதபடி கிரமமாய் பாராயணம் செய்துகொண்டிருக்கும்போது ஏராளமாய் புஷ்பம், பழம், சந்தனம் முதலிய சாமான்களோடு இரண்டொரு தன் நண்பர்களுடனும் பாராயண ஸ்தலத்திற்கு வந்து பிறகு ஒரு மணிக்குமேல் நடந்த பாராயணத்தை நின்று ஸேவை செய்து கேட்டுக்கொண்டிருந்தனர். அய்யரவர்கள் இவ்விதம் வந்ததை அறிந்து மற்றுமுள்ள வைதிகர்கள் பலர் அக்கோஷ்டியிற் கலந்துகொண்டனர். ஆகவே சுமார் 150- பெயர்கள் கோஷித்து முடிந்தவுடன் நிரந்தரமாய் பாராயணம் செய்தவர்களுக்கு இரண்டு ரூபாய்களும் பிறகு ஒன்று அரை என்றும் ஸம்பாவனை செய்து அவர்களது மனப்பூர்வமான ஆசிர்வாதாக்ஷதைகளைப் பெற்றுக்கொண்டனர். அதன் பின் ஒரு வைதிகசிரேஷ்டரால் இராமாயணம் கேவலம் லோகானிஷ்டத்தை பரமேசுவரனின் அனுக்ரஹத்தால் போக்குவதற்காகவே எங்களால் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதென்றும் விவாஹத்தடைச்சட்டம் நிவர்த்தியாகுமட்டும் நாங்கள் பாராயணத்தை நிறுத்தப்போவதில்லையென்றும் இதுதான் லோகக்ஷேமத்திற்கு ஏதுவென்றும் இவ்விதமே ஒவ்வொரு ஊரிலும் வேதபாராயணம் செய்தால் சாதகமான வழியில் நன்மை கிடைக்குமென்றும் இதில் த்வேஷிகளுக்கும் நல்லபுத்தி உண்டாகி ஆஸ்திகர்களாவார்களென்றும் ஆகவே, लोकास्समस्तास्सुखिनो भवन्तु என்ற நியாயப்படி யாவருக்கும் க்ஷேமம் ஏற்படுமென்றும் நாங்கள் பிரதிபலனை விரும்பவில்லையென்றும் ஆயினும் ஆஸ்திகோத்தமரான அய்யாவர்கள் தற்செயலாய் எங்களுக்களித்த ஸன்மானத்தைப் பெற்றுக்கொள்கிறோமென்றும் பலவாறு புகழப்பட்டது. பிறகு பிராமணஸமூஹத்தோடு இரவு 9½ மணிக்குப் பிறகு மீனாம்பிகையின் ஸன்னிதிசென்று லலிதாத்ரிசதி அர்ச்சனையை முடித்து பிரஸாதம் பெற்றுக்கொண்டு சுந்தரேசுவரர் ஸன்னிதானத்திலும் ருத்திரசதி அர்ச்சனைசெய்து பிரஸாதம் பெற்றுக்கொண்டு தங்களாலேயே ஏற்படுத்தப்பட்டிருந்த போஜனத்தை எல்லோரும் சேர்ந்து புசித்துவிட்டு தங்கள் இல்லமேகினர். பிறகு மறுதினமே சாகை பாராயணம் துவக்கி

விட்டனர். 2-தினங்கள் சென்றபின் ஸ்ரீமான் அய்யாவர்கள் புஷ்கரிணிக்கு வந்து தரிசனம் செய்துவிட்டு இம்மஹிமையை எல்லா ஆஸ்திகோத்தம லௌகிகர்களையும் தரிசனம் செய்யும்படி செய்யவேண்டுமென்று கூறிக்கொண்டனர்.

ஆஸ்திகர்களே! இதை எழுதவந்ததின் காரணம் இது மதுரையில் இவ்விதம் வைதிகோத்தமர்கள் விரதம் பூண்டதுபோல மற்றுமுள்ள கிராமம் தாலூகா ஜில்லாக்களிலும் வைதிகர்கள் இவ்விதம் தாங்களே முன்வந்து பாராயணம் ஆரம்பித்தால் வருகிற எப்ரல்குள்ளாகவே இச்சட்டம் இயற்கையாய் மாறிவிடும். லௌகிகர்களும் தங்கள் வேலையைச் செய்யட்டும். ஆனால் எங்கள் முயற்சியால் தான் அது முக்கியமாய் விலகும். இக்கார்யத்தை நான் கூறுகிறவாறு ஆரம்பித்தால் அது முன்கூறியபடி எல்லோருக்கும் ஆஸ்திக்யத்தைஉண்டுபண்ணிக்கொண்டுவிலகும்அது தான் நம்முயற்சியின் இலக்கணமென்று கொண்டு ஆஸ்திகோத்தமர்கள் இவ்விஷயத்தில் உடனே இறங்குவார்கள் என்று ஸர்வேசுவரனை பிரார்த்திக்கின்றேன். சுபம்!

M. N. சுப்பிரமணியசாஸ்திரி

வரருசி.

வாருசியென்ற இந்தமஹானுபாவர் யார்? எந்த தேயத்தில் ஆவிர்ப்பவித்தவர்? இவருடைய பிறப்பால் எந்தகுலம் அநுக்ரஹிக்கப்பட்டது? அவருடைய செய்கை எவ்விதமானது? எப்போது இவர் இம்மண்ணுலகை அலங்கரித்தார்? எந்த குருகுலத்தில் இவரால் ஸரஸ்வதியின் அநுக்ரஹம் பெறப்பட்டது? எப்படி இவருக்கு இலக்கணத்தில் (व्याकरण) ஒப்பில்லாத் திறமை ஏற்பட்டது? எந்த மஹிமையால் இவருக்கு பாணினீயங்களான சூத்திரங்களுக்கு உபயோகமான வார்த்திகஞ்செய்யும் சக்தியுண்டாயிற்று? எவள் இவருக்கு இல்லாள். எவர்கள் தோழர்கள்? எந்த வேந்தனின் சபை இவரால் விளக்கப்பட்டது? இவருடைய லௌகிக வியவஹாரத்தேர்ச்சி எவ்விதமானது? இந்த முதலான விஷயத்தை அறிந்துகொள்வதற்கு அநுதினமும் மூன்று முனிவர்களை நமஸ்கரித்து இலக்கணம் கற்பவர்களுக்கு அவல் இருக்குமென்றே எண்ணுகிறேன்.

முன்பு சராசரங்களுக்கு குருவான பார்வதிகாந்தனுக்கு மிகவும் பிரியபாத்திரர்களான பிரதமகணங்களில் புஷ்பதந்தன் என்பவன் மற்றவரைக்காட்டிலும் சிவபெருமானின் அனுக்ரஹத்திற்கிடமாயிருந்தான். ஒரு சமயம் அவன் உமாகாந்தனை சேவிக்க வந்தபோது "ஒருவரும் உள்ளே செல்லக்கூடாது" என்று திருநந்திதேவரால் தடுக்கப்பட்டபோதிலும், ஆவலோடு கூடினவராய் யோகபலத்தால் யாருமறியாமல் உள்ளே நுழைந்து, அங்கு மலைமகளுக்கு அன்போடு அரனால் வர்ணிக்கப்படும் முன் கேட்டிராத ஆச்சர்யமான வித்யாதரர்களின் சரித்திரத்தைக் கேட்டான் கேட்டுவெளியில் வந்து ஆவலோடு தனது மனையாளின்பொருட்டு அச்சரித்திரத்தை முற்றிலும் சொன்னான். ஜயையெனப் பெயர் கொண்டவ்ளும், உமாதேவியின் வாயற்காப்பவளுமான அம்மாது உமையின் முன் தான் கேட்டபடி வித்யாதரர் சரித்திரத்தைக் கூறினாள். அதைக்கேட்டதும் உமாதேவியானவள் உடனேயே பினாகபாணியான சிவபெருமானையணுகி "அபூர்வமானது என்று உம்மால் வர்ணிக்கப்பட்ட சரித்திரத்தை ஜயை கூட அறிகின்றாளே" என்று சினத்தோடு மொழிந்தாள். உமாபதியும், தியானத்தால் நடந்த வரலாற்றையறிந்து நேசியே! யாவரும் அறியாமலிருக்கும்படி உள்ளே நுழைந்த புஷ்பதந்தனால் இந்த சரித்திரம் கேட்கப்பட்டது. கேட்டு மனைவிக்கும் கூறப்பட்டது என்றுமறுமொழி கூறினர். உடனேயே, இவர் "மானிடர்களுக்குரிய ஆவலால் கலக்கப்பட்ட இந்தபுஷ்பதந்தன் மானிடனாகவே ஆகட்டும்" என்று பார்வதிதேவியால், சபிக்கப்பட்டவனாய் பூலோகத்தைப் பாரதீனமாக அடைந்து, பாரதபூமியில் கௌசாம்பீ நகரில், வஸுதத்தை என்ற மனையாளோடு கிருஹஸ்தாச்ரமத்தை நடத்தும் ஸோமதத்தர் என்ற பிராமணனுக்கு மைந்தனாக ஜனித்தார்.

இவர் குற்றத்திற்கிடமாகாத இளம்பிராயத்தில் இருக்கும்போதே அவருடைய தந்தை விண்ணுலகமேகினர். தாய்மட்டிலும் சோகத்தால் கலங்கினபோதிலும் ஒருவாறு தைர்யமடைந்து கஷ்டப்பட்டு குழந்தையை வளர்த்துக்கொண்டு, எழ்மையால் அவதிப்பட்டாலும் சக்திக்கேற்றவாறு பூஜையாலும், விருந்தாலும், தெய்வங்களையும், விருந்தாளிகளையும், ஆராதித்து வந்தாள். பாலகனும் துக்கவிருத்தாந்தம் ஒன்றும் அறியாதவனாய், நகரில் அங்கங்கு எற்படும் சபைகளிலும், சங்கீதகோஷ்டிகளிலும், எதை

எதைக் கேட்கின்றானோ அதையெல்லாம் சக்திக்கேற்றவாறு வர்ணித்துக்கொண்டும், அவளால் ஆவலோடு உச்சிமுகர்ந்து களித்துக் கொண்டாடப்பட்டும் வளர்பிறை சந்திரன் போல் வளர்ந்தான்.

ஒரு சமயம் வியாடி, இந்திரதத்தன் என்ற இருவேதியர்கள் பூமியில் சுற்றிக்கொண்டு ஓரிரவி கழிப்பதற்கு அவள் வீட்டில் தங்கி, ஒரு தடவை கேட்பதாலேயே யாவற்றையும் தாரணைபண்ணுமாறு சக்திவாய்ந்த இந்த பாலகனைக்கண்டு ஆச்சர்யபட்டவர்களானார்கள். உடனே அவர்கள் அவனைப் பரீக்ஷிப்பதற்காக "प्रातिशाख्यं" ப்ராதிசாக்கியம் என்ற வேதபாகத்தை ஒருதடவை சொன்னவுடனேயே அவ்வாறே சொல்லும் அவனைஉண்மையாகவே सकृच्छ्रुतधरः ஒரு தடவைசொன்னதைதரிக்கிறவனென்று நிச்சயித்து வஸுதத்தையை வணங்கி சொன்னதாவது— "ஓய் பதிவிரதாமணியே ! இச்சிறுவன் ஸாமான்யனல்ல. இவ்விதமான பாலகனை நாடியே நாங்கள் இங்குவந்தோம். எங்களுக்கு வைதஸபூரி என்பது ஜன்மபூமி. இளம்பிராயத்திலேயே தந்தைகளை விட்டுப் பிரிந்து, நாதனற்றவர்களாய் தந்தைகளால் தேடப்பட்ட ஏராளமான பொருளால் ஏழ்மையறியாமல் கல்விப்பொருளைவிரும்பிக்கொண்டு மனதை நிலைநிறுத்தித் தவம்செய்து குமரக்கடவுளால் "நந்தனால் ஆளப்படும் பாடலீபுத்திரஞ் சென்று வர்ஷர் என்ற பிராமணரிடமிருந்து கல்வியை அடையுங்கள்" என்று கனவிலும் கட்டளையிடப்பட்டு, அதே பட்டணத்தை அடைந்தோம். இப்பெரிய நகரில் வர்ஷர் எங்கே காணப்படுவாரோ? என்று மனங்கலங்கிக்கொண்டிருக்கும்போது "ஒருபிராமணகுலத்தில் பிறந்த வர்ஷர் என்ற மூர்க்கர் இங்கே இருக்கிறார்!" என்று ஓரிடத்தில் சொல்லிக்கொள்கின்ற ஜனக்கூட்டத்தால் அறிந்து ஓர் மூலையில் எலிவளைகளால் நிறைந்ததும், பாழுஞ்சுவரால் தளர்ந்ததும் கூரையில்லாததும், வசிக்கத்தகாததும், ஆபத்துக்களுக்கு உற்பத்தி பூமிபோன்றதுமான ஒரு வீட்டைக்கண்டோம். அங்கு தியானத்தில் அமர்ந்த வர்ஷரைக்கண்டு அருகிலுள்ளவளும், அழுக்கடைந்த இளைத்த சரீரமுள்ளவளும், கிழிந்த அழுக்கடைந்த உடைத்தரித்தவளும், அவர் குணங்களில் ஆசைகொண்டு உருவத்துடன் வந்த துர்கதிபோலவும் உள்ள அவருடைய மனைவியை வணங்கி உள்ளபடி எங்களது வரலாற்றைச் சொன்னோம்.

அம்மாதோவெனில் சொல்லியதாவது- பிள்ளைகளே! இந்த

நகரில் சபாஸ்வாமி என்ற பிராமணோத்தமர் இருந்தார். அவரிடமிருந்து மூர்க்கரும், ஏழையுமான இந்த வர்ஷர் ஜனித்தார். இவருக்கு இளையவர் புத்திசாலியும் தனிகாரயுமுள்ள உபவர்ஷர் எனப்படுவார். ஒரு சமயத்தில் தம்பியின் மனைவியால் கொடுக்கப்பட்ட வெறுக்கத்தகுந்த தளிணையோடு கூடின ஒரு தானத்தை வாங்கிக்கொண்டு இவர் என்னிடம் வந்தபோது வெகுவாய் என்னால் நிந்திக்கப்பட்டார். பின்பு வெறுப்பால் காடுசென்று குமாக்கடவுளை தவத்தால் ஆராதித்து, அவருடைய அருளால் எல்லாக்கல்விகளையும் கற்றார். "ஒருதடவை சொன்னதை தரித்துக்கொள்ளும் மாணவனை அறிந்து முதலில் இந்த வித்தைகளைப் பிரகாசப்படுத்துவாயாக" என்று சுப்பிரமணியக்கடவுளால் ஆக்ஞாபிக்கப்பட்டு, அவ்விதமான மாணவனைக் காணாமல் இரவும் பகலும் ஜபித்துக்கொண்டும், தியானித்துக்கொண்டும் இருக்கிறார். ஆகையால் அவ்விதமான ஒருவன் தேடப்படட்டும்"—என்று.

பிறகு ஏழ்மை நீங்கும்படி அம்மாதுக்கு நூறு பொன்களை கொடுத்துப் புறப்பட்டு பூமியனைத்தையும் சுற்றி அலைந்துகொண்டு ஓரிடத்திலும் அவ்விதமான மாணவனைக் காணாமல் மிகுந்த வெறுப்படைந்தவர்களாய், இங்கு தெய்வச்செயலாய் ஒரு தடவை சொன்னதை தரிக்கிற இந்த பாலகனைக் கண்ணுற்றோம். கல்வி கற்பதற்கு இவனை அனுப்பவேண்டும்" — என்று

இவ்வாறு அவர்களின் வார்த்தையை ஆதாவுடன் கேட்ட அம்மாது "அப்படியே செய்யப்படட்டும்" இவன் பிறக்கும்போதே "இவன் ஒருதடவை கேட்டு வர்ஷரிடமிருந்து வித்தைகளை அடையப்போகிறான்" மேலும், உலகில் வியாகரணத்தை நிலை நிறுத்தப்போகிறான். எது எது சிறந்ததோ அதெல்லாம் இவனுக்கு ருசிக்கிறதாகையாலே பெயராலும் இவன் வாருசியென படுவான் என்று அசரீரியான வாக்கு உண்டாயிற்று. அதைப் பின்பற்றியே தாங்களும் வந்தீர்களென்று எண்ணுகிறேன்" என்று சொல்லிக்கொண்டுசந்தோஷத்துடனேயே பாலகனை அவர்களின் கையில் அர்ப்பித்தாள்.

(தொடரும்)

கே. வி. சுப்பிரமணியசாஸ்திரி

மாயிருக்கும் வானில்லாததாலல்லவா அவள் விவாஹம் செய்து கொள்ளவில்லை. இவ்வாறேபல்லவா அவ்வுபாக்கியானத்தில் வெளியாகின்றது? ஆகவே துராசாரமூலமாகவிருக்கும் ஸுப்ரூ சரித்திரம் இவ்விஷயத்தில் எப்படிப் பிரமாணமாகும்? ஆகையால் தான் ஸ்ரீபட்டபாதரும், "காமக்ரோதமூலமாகவுமாசாரம் ஸம்ப விக்குமாதலால், ஆசாரத்தில் சாஸ்திரம் பிரமாணமில்லை. அர்த்தத் திற்காகவும், ஸுகத்திற்காகவும் ஆசாரமேற்படுமாதலால் அது தர்மமுமல்ல. எப்படி அர்த்த ஸுகஸ்தனமாக அனுஷ்டிக்கப்படும் வர்த்தகவியாபாரங்களும், வைத்தியசாஸ்திராசாரங்களும், ஊழியக்காரர்களின் ஆசாரங்களும், நகரஜனஸமுதாயாசாரங்களும், வைதிகதர்மமாக ஏற்படமாட்டாதோ, அப்படியே மற்றுமுள்ள பணம், சுகம் இவற்றிற்குச் சாதனமாகிய ஜனசாரங்களெல்லாம் தர்மமாகமாட்டாது. தர்மத்தில் ச்ருதி ஸ்மிருதிகளொன்றே பிரமாணமாகும்" என்று அனேகமாக ஆசாரமெல்லாம் ஆசையின் மூலமாயுமேற்படுமாதலால் ஆசாரம் தர்மப்பிரமாணமில்லையென்று கண்டனம் செய்திருக்கின்றார். ஆகவே காமமூலமாகவிருக்கும் ஸுப்ரூ சரிதம் தர்மப்பிரமாணமாக அங்கிகரிக்கத் தக்கதல்ல.

5. அன்றியும் ஸுப்ரூவானவள் அமாநுஷசக்திவாய்ந்தவள். ஆகவே அவளுடைய சரித்திரத்தைத் தற்போதிருக்கும் நமது பெண்களும் பின்பற்றியனுஷ்டிக்க எப்படிமுடியும்? அவளை கர்ப்பவாஸம் முதலிய தோஷமில்லாமலேயே "குணி" என்றொரு மஹரிஷியானவர் தமது தபோவிசேஷத்தாலுத்பத்திசெய்ததாக வல்லவா அவள் சரித்திரத்தில் விளங்குகின்றது. அதாவது ஸ்ரீ பாரதத்தில் "அபாரவீர்யமுள்ளவரும், யசஸ்வியாகவும், கர்கபுத்திரராகவுமிருக்கும் குணி என்றொரு மகரிஷி இருந்தார், அவர் நெடுநாள் தவம்புரிந்து அத்தபோவிசேஷத்தால் ஸுப்ரூ என்றொரு பெண்ணைப் பெற்றார்" என்றல்லவா சொல்லியிருக்கின்றது தவிர அவள் தன் தபோபலத்தால் விலையுயர்ந்த ஆடையாபரணங்களையணிந்துகொண்டு அளவற்ற லாவண்யமுள்ள யுவதியாக ஒரு க்ஷணநேரமும், மற்றொரு க்ஷணத்தில் சிறு கன்யகையாகவும், மறு நிமிஷத்தில் கிழவியாகவும் தனது ரூபத்தை எடுத்துக்கொண்டதாகவும் அச்சரித்திரத்திலேயே வர்ணிக்கப்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட மஹிமை நமதுபெண்கள் யாருக்காவது ஸம்பவிக்குமா? இக்காரணத்தாலும் அவளுடைய சரித்திரத்தை

நிதர்சனமாக வைத்துக்கொண்டு நம்போன்றவர்களின் பெண்களுக்குமாசாரத்தை சீர்திருத்தஞ்செய்வது மிகவும் அஸங்கதமேயாகும்.

6. தவிர "விவாஹம் செய்துகொள்ளாத உனக்கு லோகாந்தரம் எப்படிக்கிடைக்கும்? விவாஹஞ் செய்துகொள்ளாதவளுக்கு லோகாந்தரமில்லையென்று தேவலோகத்தில் எமதுகாதில் விழுந்தது. அளவற்ற தபச்சக்தியை நீ ஸம்பாதித்துக்கொண்டிருந்தும் லோகாந்தரமுனக்கு ஸித்திக்கவில்லையே" என்று மகா மஹிமையடைந்திருக்கும் ஸுப்ருவுக்கும் விவாஹமில்லாமலிருந்த தோஷத்திற்காகப் பரலோகமில்லையென்பதாக நாரதமகரிஷியானவர் சாபமளித்துவிட்டதாகச்சொல்லப்பட்டிருக்கின்றது. மேலும் அந்த நாரதருடைய வசனத்தைக்கேட்டவுடன் ஸுப்ரு மிகுந்த பயத்தையடைந்து தன்னால் ஸம்பாதிக்கப்பட்டிருக்கும் தபஸின் பாதிபாகத்தை தன்னை விவாஹம்செய்துகொள்பவர்களுக்குப்பாரிதோஷிகமாக அர்ப்பணம் செய்வதாகப் பிரசுரப்படுத்தி அதற்கிணங்கி வந்த ஒரு மகரிஷியை விவாஹம் செய்துகொண்ட பிறகு தான் லோகாந்தரம் சென்றுளென்றும் அவ்விடத்திலேயே ஸ்பஷ்டமாய் சொல்லியிருக்கின்றது. ஆதலால் வெகுநாள் தவம் புரிந்து எந்த விவாஹத்தை செய்து கொள்ளாத தோஷம் ஒன்றுக்காக மாத்திரமே மகாதபஸ்வினீயாகவும், அனேகவித சக்தி விசேஷம் அமைந்தவளாகவுமிருக்கும் ஸுப்ருவுக்குங் கூட "லோகாந்தரமில்லை" என்று நாரதமகரிஷியானவர் வெகு தைரியமாக கர்ஜித்தாரோ! அளவற்ற மஹிமைவாய்ந்த அவளும் அந்நாரதருடைய உபதேசத்தைக் கேட்டு மிகவும் நடுங்கி தனது தபஸின் பாதியை, தன்னை மணந்துகொள்ளும் கணவனுக்கு வரதக்ஷிணையாகக் கொடுப்பதாக பறையறைவித்து அதைவிரும்பி வந்த ஒரு ரிஷியை விவாஹம் செய்துகொண்டபிறகே பரலோகம் சென்றனளோ! எந்த விவாஹத்தை செய்துகொள்ளாமலிருந்த தோஷமானது அனேக காலமாகவும் அனேகவிதமாகவும் அனுஷ்டிக்கப்பட்ட தபோவிசேஷத்தாலும் பரிஹரித்துக்கொள்ள முடியவில்லையோ, அந்த விவாஹம் ஸ்திரீகளுக்கு நித்யந்தானென்பதையும் சொல்லவேண்டுமோ? இவ்விருத்த கன்யோபாக்யானமொன்றே ஸ்திரீகளுக்கு விவாஹம் நித்தியமென்பதற்கும் முக்கிய பிரமாண சிரேஷ்டமாகும். இவ்விதம் ஸ்திரீ விவாஹம் காம்ய

மென்பதற்குப் பிரமாணமாக எடுத்துக்காட்டிய இச்சரித்திரமே காம்யமில்லை என்பதற்கு பிரமாணமாக ஏற்பட்டுவிட்டதால் இச்சரித்திரங்களைப் பிரமாணமாக எடுத்து உதாஹரித்துக்கொண்டு, ஸ்திரீ விவாஹம் காம்யமென்பதை ஸித்தாந்தப்படுத்துவதன் பொருட்டு கூக்குரல் இடுவது மூடஸாஹஸமேயாகும்.

அன்றியும் "விவாஹமவசியமென்றாலும் ருதுவுக்குப்பிறகு தான் அதைச்செய்யவேண்டுமேயொழிய ருதுவுக்கு முந்தியல்ல" என்ற விஷயமும் இந்த ஸுப்ரூபாக்யானத்திலிருந்து ஏற்படுகின்றது என்று பூர்வபக்ஷிகளின் வசனமும் நன்றன்று. ஏனென்றால் அவ்வுபாக்யானத்திலிருந்து ஸுப்ரூவானவள் தனது தபோ மஹிமையால் விவாஹயோக்யவயதிலிருந்து கொண்டேதான் விவாஹம் செய்துகொண்டாளென்பதாக அல்லவா புலப்படுகின்றது? இவ்விஷயத்தைப் பிறகு விசாரித்து விஸ்தாரமாகக் கண்டனம் செய்வாம்.

இதனால் வ்யாஸபகவானும் எதற்காக இத்தகைய வ்யாக்யானங்களை எழுதவேண்டும் என்ற பரிஹாஸவசனமும் அகன்றுவிட்டது. ஏனென்றால் சுருதிஸ்மிருதிகளின் தத்வார்த்தத்தை நன்றாயறிந்துகொள்ளாமல் க்ஞானபாஸமர்த்திரத்தினாலே மேல்கண்ட பிரகாரமாக இஷ்டப்பட்டால் விவாஹம் ஸ்திரீகள் செய்துகொள்ளலாம். விவாஹத்தில் இஷ்டமில்லாதபக்ஷத்தில் செய்துகொள்ளவேண்டியதில்லையென்று உலகெங்கும் ஸ்தாபித்துவிடுவதற்காக சாஸ்திரவிதிக்கு ஒவ்வாத சில ஸ்திரீசரித்திரத்தை மகாப்பிரமாணமாக திடமாய்அவலம்பித்துக்கொண்டும் விரவாதம்பேசிக்கொண்டும் நடனமிடும் தங்களைப்போன்ற நவீன சீர்த்திருத்தக்காருடைய தாண்டவ ஆடம்பரங்களைத் தங்களால் எடுத்துக்காட்டப்பட்ட பிரமாணத்தைக்கொண்டே அடியோடு நிராகரணம் செய்வதற்காகவேதான் ஸ்ரீ வியாஸபகவான் இத்தகைய சரித்திரங்களை எழுதவேண்டியது மிகவும் அவசியமேயாகும். ஆகையால் ஸ்திரீகளுக்கு விவாஹம் காம்யம் என்பதுக்கு ஸுப்ரூ சரித்திரம் பிரமாணமில்லை என்பதுமட்டிலும் அல்லாமல் அது நித்யமென்பதற்கும் பிரமாணமாக அச்சரித்திரமேயாகிவிட்டது. ஸ்ரீ பாரதத்தில் காணப்படும் இவ்வுபாக்யானம் போன்ற மற்றுமுள்ள உபாக்யானங்களுக்கும் இம்மாதிரியே ஸமாதானம்சொல்லப்பட்டுவிட்டதாக அறியவேண்டும். அவ்வுபாக்யானங்களுங் கூட, விதி

வாக்யங்களல்லாததாலும் காமமூலமாகவிருக்கும் ராஜஸ சரித்திரமாயிருப்பதாலும் மனுஷ்யர்களுக்கு ஸம்பவிக்கமுடியாத சக்திவிசேஷம் பொருந்தியவர்களுடைய சரித்திரமாயிருப்பதாலும், முடிவில் சாஸ்திரவிதிக்கு விரோதமில்லாமல் சாஸ்திரஸித்தாந்தத்திலேயே தாத்பர்யபர்யவஸானத்தையடைந்து விடுவதாலும் ஸநாதன வைதிகதர்ம பிரமாணமாக சொல்வதற்கு முடியாதல்லவா? ஆகையால் ஸ்திரீகளுக்கு விவாஹம் நித்யமென்றுதானே ஒப்புக்கொள்ளவேண்டும். அன்றியும் விவாஹம் ஸ்திரீகளுக்கு நித்யம் என்ற விஷயத்தை சுருதிஸ்மிருதி முதலிய பிரமாணங்களை நன்கு விசாரித்துபாண்டித்தியமுள்ளவர்களே அறிந்துகொள்ள வேண்டுமென்பதில்லை, "சாகுந்தளம்" முதலிய காவ்யங்களை பள்ளியில் பரிசீலனம் பண்ணியிருக்கும் சிறு பாலர்களுக்கு இவ்விஷயம் மிகப்பிரசித்தமன்றோ, அப்படியே கன்யகை என்ற பதார்த்தம் பிறருக்குச் சொந்தமானதேயொழிய பெற்றோருக்குச் சொந்தமானதல்ல" என்று பிராமாணிகனாகவும் கவிகுலதிலகனாகவுமிருக்கும் காளிதாஸனும், கண்வவேஷத்துடன் சாகுந்தள நாடகத்திலும் அறிவித்திருக்கின்றானன்றோ? ஆகையால் ஸ்திரீகளுக்கு விவாஹம் நித்யமென்பது பண்டிதர்களாலும் பாமரர்களாலும் அறிந்துகொள்ளக் கூடுமாதலால் ஸ்திரீகளுக்கு விவாகம் நித்யம் என்று ஸித்தம்.

வயோவிசாரம்.

இதுவரையில் விவாகம் ஸ்திரீகளுக்கு நித்யமென்று நிர்ணயிக்கப்பட்டது. இனி அதை அவர்களுக்கு எந்த வயதில் செய்வது சாஸ்திரீயம்? எந்தவயதில் செய்வது அசாஸ்திரீயமென்னும் விஷயத்தை விமர்சம் செய்யத்தொடங்குவாம்.

அதில் சில நவீனமேதாவிகள் பிராம்மணஸ்திரீகளுக்கு விவாகம் ருதுவானபிறகு செய்வதுதான் சாஸ்திரீயம். ருதுவுக்கு முன் விவாகம் செய்வது சாஸ்திரீயமல்லவென்று அபிப்பிராயப்படுகிறார்கள். வைதிகர்களோ ஸ்திரீகளின் எட்டாவது வயது விவாகத்திற்கு முக்கியகாலமென்றும் எட்டாவதுக்கு மேல் ருதுவுக்கு முன்பு கௌணகாலமென்றும் ருதுவுக்குப்பிறகு விவாகம் செய்யத்தகாத காலமென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். ருதுவுக்குப் பிறகு ஸ்திரீகளுக்கு விவாகம் செய்வது முற்றிலும் சாஸ்திர விருத்தமென்று வைதிகர் ஸித்தாந்தமாகும்.

இவ்விஷயத்தில் தற்காலத்து நவீன மேதாவிகளின் ஆக்ஷேபமாவது— ஸ்திரீகளுக்கு ருதுவுக்குப் பிறகு விவாகம் செய்வது தான் சாஸ்திரியாகும். அவ்வண்ணமே சுருதிஸ்மிருதிகளும் அறிவிக்கின்றன. முதலில் பிரமாணசிரேஷ்டமாக யாவராலும் விவாதமின்றி அங்கீகரிக்கப்பட்ட சுருதிகளை பராமர்சம் பண்ணுவோம் விவாககர்மாவுக்கு அங்கமாக சாஸ்திரங்களால் விநியோகம் பண்ணப்பட்டிருக்கும் மந்திரங்களை விசாரிக்குமிடத்து விவாகம்செய்விக்க வேண்டிய ஸ்திரீகள் ருதுமதிகளாகவேதான் இருக்கவேண்டுமென்று ஸ்பஷ்டமாய் விளங்குகிறது. பொதுவாக மந்திரங்களுக்கு அர்த்தமொன்றுண்டென்பதும் கர்மஸம்பந்தியாகவிருக்கும் அர்த்தத்தைப் பிரகாசப்படுத்திக்கொண்டே கர்மாக்களில் விநியோகமென்பதும் அங்கீகரிக்கவேண்டியது அவசியமாயிருக்கும் பட்சத்தில் ருதுமதீ விவாகமும் சாஸ்திரீயந்தானென்றும் அங்கீகரிக்கத்தான் வேண்டும். ருதுமதிவிவாகத்திற்கு சூசகமாயிருக்கும் மந்திரலிங்கங்களாவது:—

1. விவாககர்மாவில் கன்யகையினுடைய ஒவ்வொரு அவயவங்களையும் தர்சனம்செய்யும் விஷயத்தில் விநியோகம்பண்ணப்பட்டிருக்கும் மந்திரமானது விவாகப்பெண்கள் விவாகம் செய்யப்படுங்காலத்தில் ப்ரௌடைகளாகவே இருக்கவேண்டுமென்று அறிவிக்கின்றது. இந்த மந்திரத்தால் விவாகப்பெண்ணுக்கு க்ரூரமற்ற திருஷ்டியும், நல்ல ஹிருதயமும், பிதிரு தேவகாரியங்களிலாவலும் பதிகுலத்து ஸகல பந்துக்களிடத்திலும் விசுவாஸம், பயம், பக்தி முதலியவைகளும் ஏற்படவேண்டுமென்று வரன் பிரார்த்தித்துக்கொள்வதாக பிரதிபாதிக்கப்படுகின்றது. இவையெல்லாம் ருதுவாகாத சிறு பெண்ணால் எப்படி அறிந்துகொள்ள முடியும்? தர்மாதர்மம், ஹிதாஹிதம், நன்மைதீமை, காரியாகாரியம் என்ற பகுத்தறிவு சிறிதுமில்லாத விளையாட்டுக்குழந்தைகளுக்கு க்ரூர திருஷ்டி, க்ரூரமற்ற திருஷ்டி நல்ல ஹிருதயம் கெட்டஹிருதயம் என்றபகுத்தறிவுண்டாகவே மாட்டாது. என்றால் இம்மந்திரத்தால் பிரார்த்தித்துக்கொள்ளப்படும்பிரயோஜனத்தை சிறுபெண்ணிடம் எதிர்பார்ப்பது தகுதியாகாதன்றோ? ஆகையால் இம்மந்திரார்த்தத்தை விசாரிக்கும்பொழுது இம்மந்திரார்த்தத்தை அறிந்து அனுஷ்டிப்பதற்குத் தகுதியான வயதுள்ள யுவதியாகவேதான் விவாகப்பெண் இருக்கவேண்டுமென்று புலப்

படுகிறதேயன்றி இம்மந்திரார்த்தத்தை அறிவதற்கும் அனுஷ்டிப்பதற்கும், "அர்ஹதையற்ற சிறு பெண்ணாகப் புலப்படுவதில்லை. ஆகவே இம்மந்திர லிங்கத்தால் ருதுமதீ விவாகம் சாஸ்திரீயம் தான் என்று முதலாவதாக ஸித்தம்.

2. விவாஹமானவுடன் வரன் "வதூவைத் தனது க்ருஹத்துக்கு அழைத்துச்செல்லுங்காலத்தில் வதூபந்துஜனங்கள் பிரியமுள்ள பெண்ணின் வியோகத்தை ஸஹிக்காமல் வருத்தப்படுவார்களேயானால், அச்சமயத்தில் ஜபிக்கவேண்டுமென்று விதிக்கப்படும் மந்திரமும் ருதுமதீ விவாஹலிங்கமாகும். இம்மந்திரத்தால் "இந்த பந்துக்களனைவரும் மங்களகாலத்தில் உயிருடனிருக்கும்போதே, இப்பெண்ணைக்குறித்து வருத்தமடைகிறார்களே? மங்களகாலத்தில் ஸந்தோஷப்படவேண்டியிருக்க வருத்தப்படுவது நியாயமில்லை. பிதிருக்களுக்கு திருப்திகரமாகவும், எனக்கு ஆலிங்கன ஸுகஸாதனமாகவுமிருக்குமிவ்விவாஹத்தை நடத்தியவர்களாகிய பந்துஜனங்களனைவரும் ஸதிபதிகளின் தீர்க்ககாலஸ்னேகத்தை யாலோசித்துக்கொண்டு வருத்தப்படாமலிருக்கட்டும்" என்று சொல்லப்படுகிறது. இம்மந்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஆலிங்கனசுகம் பாலிகாவிவாகத்தில் ஏற்படமுடியாதல்லவா? விவாகத்திற்கு ஆலிங்கனத்தைப் பிரயோஜனமாக சொல்லும் இம்மந்திரத்தாலும் பிரௌடாவிவாகந்தான் வெளியாகிறது.

3. இவ்விதமே விவாகப்பெண்ணுக்குப் பதிசரீரசம்பந்தத்தை விதிக்கும் மற்றொரு மந்திரத்தாலும் பதிசரீரசம்பந்தத்திற்கு யோக்யமாயிருக்கும் ருதுமதியையே விவாகம் செய்விக்கவேண்டுமென்று நிர்ணயமாய்த்தெரிகின்றது. சிறு பெண்ணிடம் இம்மந்திரார்த்தம் பொருத்தமாகாதன்றோ!

4. "ஸோமன் உன்னை முதலில் அடைந்தான்" என்ற மந்திரத்தில் சொல்லப்படுமர்த்தந்தான் ருதுமதீ விவாஹத்துக்கு முக்கியப் பிரமாணம். இம்மந்திரத்தில்விவாஹப் பெண்ணிற்கு ஸோமன், கந்தர்வன், அக்னி, மனுஷ்யனென்ற நான்கு பதிகள் இருப்பதாகவும், ஒருவர் மற்றொருவருக்குத் தானம் செய்வதாகவும் பிரதிபாதிக்கப்படுகின்றது. ஸ்மிருதிகளிலும் இவ்விஷயம் சொல்லப்பட்டிருக்கின்றது, அதாவது ஸ்திரீகளை யோனிரோமம் உற்பத்தியடையும்போது ஸோமனும் ஸ்தனமண்டலமஸ்திவாரமிடும்

போது கந்தர்வனும், ரஜஸ்ஸுண்டாகும்போது அக்னியும், அனு பவித்துக்கொண்டு வருவதாகவும், ஸ்மரிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே ரஜஸ் உத்பன்னமானபிறகு அனுபவித்துக்கொண்டு வரும் அக்னிபகவான் மனுஷ்யனுக்குப் பெண்ணைத் தானம் செய் வதாக பிருகிருத மந்திரார்த்தம் ஸித்திக்கின்றது. அக்னியால் தானம்செய்யப்பட்ட பிறகுதான் மனுஷ்யனுக்கு அவள் பாரி யை ஆவாள். அக்னியும்தான் அப்பெண்ணை ரஜஸ்ஸுண்டான பிறகு அனுபவித்துவிட்டு மனுஷ்யனுக்கு தானம் செய்யவேண்டு மானால் அவள் ருதுவாகாமல் எப்படியிருக்கமுடியும்? ஆகையால் இம்மந்திரார்த்தத்தை கவனிக்கும்போது மனுஷ்யர்களுக்கு ருது மதீ விவாகந்தான் செய்யவேண்டுமென இம்மந்திரமூலமாக ஸ்ப ஷ்டமாய்த் தெரிகின்றது.

5. பாணிக்ரஹணத்தில் விநியோகம் பண்ணப்பட்டிருக்கும் மந்திரத்தால் ஸத்புத்திரனை அடையும்பொருட்டு பாணிக்ரஹணம் செய்வதாகவும் கிழவபது வரையில் உனக்குநான் பதியாகவிருக்க வேண்டுமென்பதாகவும், வரன் வதூவைப்பார்த்துக் கூறுகிறதாக சொல்லப்பட்டிருக்கின்றது. புத்திரனைப்பெறுவதற்கு யோக்ய மில்லாத அவஸ்தையிலிருக்கும் சிறுமியிடத்தில் இம்மந்திரார்த் தம் ஸங்கதமாகாதாகையால் புத்திரோத்பத்திக்கு தகுதியானவய திலிருக்கும் யுவதியைத்தான் விவாஹம்செய்விக்கவேண்டுமென்று ஏற்பகின்றது.

அன்றியும் "ஸப்தபதீப்ரக்ரமணம்" என்ற கர்மாவைச்செய்த வுடன் ஸப்தம (ஏழாவது) பதநிஷ்க்ரமணம் நடத்துங்காலத்தில் வரனை ஜபிக்கவேண்டுமாறு விதிக்கப்படும் மந்திரங்களாலும் ருது மதீ விவாஹமேதான் அறியப்படுகின்றது. அம்மந்திரங்களில் மிக நேசமாகவிருக்கும் இரண்டு ஸதிபதிகள் பரஸ்பரம் சிருங்கார மாகவும், பிரியமாகவும், ஸல்லாபம் செய்வதுபோல் பரஸ்பரஸ்நே கம் முதலிய பிரயோஜனங்களை விவாஹப்பெண்ணுக்கு வரன் பிரா ர்த்தித்துக்கொள்ளுகிறான். அதாவது"ஸப்தபதீ நிஷ்கிரமணத்தை செய்துகொண்ட நீயும் நானும் மிக ஸ்னேகத்துடனிருக்கவேண் டும். உன்னிடம் எனக்கு ஸ்னேகமுண்டாகவேண்டும். நம்மிருவ ருக்கும் ஸ்னேகம் எக்காலத்திலும் அழியாமல் நீடூழிகாலமிருக்க வேண்டும். ஒற்றுமையுடன் நாமிருக்கவேண்டும். ஒரே சித்தம்

அமைந்தவர்களாகவும், நித்ய ஸந்துஷ்டர்களாகவும், இவ்விவாஹ மூலமாக விசேஷகாந்தியுள்ளவர்களாகவும், இல்லற சுகங்களைஸம மாகவே அனுபவிக்கிறவர்களாகவும், இருக்கவேண்டும். லௌகிக வைதிககாரியங்களெல்லாவற்றையும் ஒற்றுமையுடன் நடத்தி வரவேண்டும், இந்திரியங்கள் மனம் இவையெல்லாம் உனக்கும் எனக்கும் ஒன்றாகவேயிருக்க வேண்டும். நீ ருக்வேதரூபம், நான் ஸாமவேதம். ருக்வேதத்திற்கும் ஸாமவேதத்திற்கும் பரஸ்பரம் ஸ்னேகம் அதிகமிருப்பதுபோல உனக்கும் எனக்கும் இருக்கவேண்டும். ஆகாசமும் பூமியும் மேலும் கீழும் இருப்பதுபோல் நாமும் இருக்கவேண்டும். என்னுடைய வீரியத்தை நீ தரித்துக் கொள்ளவேண்டும். மனமும் வாக்கும் ஒற்றுமையுடனிருப்பது போல் நாமும் இருக்கவேண்டும். புத்திரன் புத்திரி தனதான்யம் முதலிய ஐசுவர்யங்கள் தர்மகாரியங்கள் இவைகளை எனக்கு ஸம்பாதித்துக்கொடுப்பதற்காக என்னிடம் வருவாயாக—என்றுவெகு விஸ்தாரமாக சொல்லப்பட்டிருக்கிறது. இம்மந்திரங்களால் ருக் ஸாமம் ஸாமம் முதலிய திருஷ்டாந்தங்களைக்கொண்டு வரனால் பிரார்த்திக்கப்படும் ஸ்னேகம் முதலிய பிரயோஜனங்களெல்லாம் சிறு பெண்ணிடம் ஸம்பவிக்கமுடியாதல்லவா? இம்மந்திரங்களால் தம்பதிகளிருவரும் யௌவன வயதிலிருக்கவேண்டுமென்றல்லவா புலப்படுகின்றது. வரன் மட்டிலும் யௌவனதசையில் இருக்கும் பக்ஷத்தில் இம்மந்திரார்த்தம் ஸங்கதமாகிவிடுமா? அப்படியானல் ஸ்னேகம் முதலியவைகளை அறியும் சாமர்த்தியம் இல்லாத சிறு பெண்ணிடம் அல்லவா இம்மந்திரார்த்தமாகிய சிருங்கார ஸல்லாபத்தை செய்ததாக முடிந்துவிடும். இவ்விதம் சிறு பெண்ணிடம் இம்மந்திரப் பிரயோஜனத்தை எதிர்பார்ப்பதென்பது ஆசாமோதகத்துக்கொப்பாகுமன்றோ? ஆகவே யுவதியினிடம்தான் இம்மந்திரார்த்தமனைத்தும் ஸங்கதமாகுமாதலால் விவாஹப்பெண் யுவதியாகவே இருக்கவேண்டுமென்றுதான் அங்கீகரிக்கவேண்டும்.

7. இவ்வண்ணமே பதிக்கிருஹம் செல்வதற்காக விவாஹப் பெண் ரதத்திலேறும்போது ஜபிக்கவேண்டுமென்று வரனுக்கு விகிதமாயிருக்கும் மந்திரமும்விவாஹப்பெண்ணை ருதுமதியாகவே அறிவிக்கின்றது. இம்மந்திரத்தால் வரன் தனக்கும், தனது தாய் தகப்பனுக்கும், தன் புத்திரன் புத்திரி முதலியவர்களுக்கும், நாத்தனர், மாட்டுப்பெண் முதலியவர்களுக்கும், தனது தனதான்யம்